ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 31.03.2015 |

## பணவீக்கம் 2015 மாச்சில் மேலும் வீழ்ச்சியடைந்திருக்கிறது

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றங்களின் மூலம் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் (2006/07 = 100) 2015 பெப்புருவரியில் 0.6 சதவீதத்திலிருந்து 2015 மாச்சில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்டுச் சராசரிப் பணவீக்கமும் 2015 பெப்புருவரியின் 2.9 சதவீதத்திலிருந்து 2015 மாச்சிற்கு 2.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.



கொ.நு.விலைச் சுட்டெண் 2015 பெப்புருவரியிலிருந்து 2015 மாச்சில் 0.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளர்களாக இம்மாத காலத்தில் மிதமடைந்த உணவு விலைகள் காணப்பட்டன. அநேக வகைக் காய்கறிகள், அரிசி, கோதுமை மா, சில வகைக் கருவாடுகள், வெதுப்பக உற்பத்திகள் 2015 பெப்புருவரியில் நிலவிய விலைகளுடன் ஒப்பிடுகையில் 2015 மாச்சில் வீழ்ச்சியடைந்தன. எனினும், இறைச்சி, சில வகை உடன்மீன்கள், சில வகைப் பழவர்க்கங்கள், தேங்காய், சில தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் என்பனவற்றின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

உணவல்லா வகைக்குள், வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் மற்றும் போக்குவரத்து துணைத் தொகுதிகள் என்பன 2015 பெப்புருவரியில் அறிவிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின்படி திரவப் பெற்றோலிய வாயுவின் விலை மற்றும் பேருந்துக் கட்டணங்கள் கீழ் நோக்கித் திருத்தப்பட்டமையிலிருந்து தோன்றிய முழுமையான தாக்கத்தின் பெறுபேறாக வீழ்ச்சியடைந்தன. எனினும், ஆடைகள் மற்றும் காலணி, தளபாடங்கள், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டு உபாயோகப் பொருட்கள், சுகாதாரம், பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் துணை வகைகளின் விலைகள் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. கல்வி மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துணை வகைகளின் சராசரி விலைகள் மாற்றமின்றிக் காணப்பட்டன

2015 மாச்சில் பொருளாதாரத்தின் முக்கிய பணவீக்கத்தினைக் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 பெப்புருவரியின் 0.8 சதவீதத்திலிருந்து 1.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2015 பெப்புருவரியில் 3.2 சதவீதத்திலிருந்து 2015 மாச்சில் 3.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.